19.11.2025 Mcop 225/2023 ம.சா1 லட்சுமிசங்கர்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு 3ம்எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை

விபத்தில் என் அப்பா இறந்துவிட்டார். 2முதல் 4 மனுதாரர்களுக்கு திருமணமாகி விட்டது என்றால் சரிதான். 2 முதல் 4 மனுதாரர்கள் தனிதனியாக தான் வசித்து வருகிறோம் என்றால் நானும், அண்ணனும் ஒரே இடத்தில் குடியிருக்கிறோம். எனது சகோதரி தனியாக வசித்து வருகிறார். நான் ஸ்டோரில் வேலை செய்கிறேன். என் அண்ணன் திருமலைக்குமார் கடந்த வாரம் இறந்து விட்டார். விபத்தின் போது எனது அப்பாவிற்கு 76 வயது என்றால் சரிதான். என் அப்பா கடை வைத்து மாதம்தோறும் ரூ.20ஆயிரம் சம்பளம் பெற்றதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து சமயத்தில் என் அப்பாவின் வருமானத்தை சேர்ந்து 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் இல்லை என்றால் சரியல்ல. விபத்தை நான் நேரடியாக பார்த்தேனா என்றால் இல்லை. விபத்தின் போது எனது தகப்பனார் இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தார். விபத்தின் போது எனது அப்பாவிற்கு ஒட்டுனர் உரிமம் இருந்ததா என்றால் இருந்தது. என் அப்பா தான் வயது முதிர்வின் காரணமாக கண்பார்வை குறைந்து செவிதிறன் குறைந்தும் சாலையை சரியாக கவனிக்காமல் அவராகவோ விபத்தை ஏற்படுத்தி கொண்டார் என்றால் சரியல்ல. என் அப்பா ஒட்டி சென்ற வாகனத்திற்கு காப்பீடு செய்யப்படவில்லை என்றால் அது பற்றி தெரியவில்லை. கார் ஒட்டுனர் மீது எந்தவித தவறும் கிடையாது என்றால் சரியல்ல. விபத்து சமயம் எனது தகப்பனார் தலைகவசம் அணியாமல் சென்றதால் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரரின் ஒட்டுனர் விபத்து சமயத்தில் எனது தகப்பனார் நிலைதடுமாறி கீழே விழுந்ததை உதவி செய்ய சென்ற

நபர் என்றால் சரியல்ல. விபத்து சம்பந்தமான பார்வைமகசர், மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கைகள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் மீது எவ்வித தவறும் இல்லாததால் 3ம் எதிர்மனுதாரர் காப்பீடு கழகம் இழப்பீடு தொகை வழங்க கடமைப்பட்டது அல்ல என்றால் சரியல்ல. பல்வேறு தலைப்புகளில் நான் கோரியுள்ள இழப்பீடு தொகை கிடைக்கதக்கது என்றால் சரியல்ல. 3ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.

(ஒம்)எஸ்.முருகவேல்,
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.